ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# குறுந்தொகையில் உணவுப்பொருட்கள்

**முனைவர்.த.பத்மா**

**உதவிப்பேராசிரியர் , தமிழாய்வுத்துறை**
**புனிதசிலுவை தன்னாட்சிக் கல்லூரி**

**திருச்சிராப்பள்ளி – 02.**

**மின்னஞ்சல்: padmakvb@gmail.com**

**22**

**ஆய்வுச்சுருக்கம்:**

உலகில் மனிதன் தோன்றிய காலத்திலிருந்து இன்று வரை, உணவு அவசியமானதும் தவிர்க்க இயலாத ஒன்றாகவும் விளங்குகிறது. உணவானது அனைத்துப் பகுதிகளிலும் ஒரே மாகிரியான உணவாக இருப்பதில்லை. அந்தந்த நாட்டின் கால நிலைக்கு ஏற்றவாறும் , அந்தந்த நிலத்திற்கு ஏற்றவாறும் விளையும் உணவின் பயன்பாடு மாறுபடுகிறது மக்களுடைய அன்றாவாழ்வின் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளுமே காலப் போக்கில் நாகரிகப் பண்பாட்டுச் செயல்முறைகளா அறியப்படுகின்றன. வேட்டைச் சமூகமாக இருந்த மனிதன் இனக்குழச் சமூகமாக மாறி வந்தான். கால்நடைகளைத் தன் வசமாக்கிக் கொண்டு வேளாண் தொழிலை மேற்கொண்டான். தொழில்களுள் முதன்மையானது வேளாண் தொழிலாகும். போர், வெற்றி, வீரம், கொடை உழவு, கையறுநிலை என்றுள்ள புறநானூறு பற்றிய செய்திகள் அனைத்தும் தமிழகத்தின் பண்பாட்டு வேர்களை அடையாளம் காட்டுபவையாக அமைகின்றன. மன்னரும், மக்களும் அடிப்படைத் தொழிலான உழவையும் அதன் மூலம் கிடைக்கும் இயற்கை உணவையும் உயர்வாகக் கருதினர் என்பது தெளிவாகிறது.

**திறவுச்சொற்கள்:** திணை – தானியம்,மங்குல்- மேகம், சிதட்டுக்காய்- உள்ளீட இல்லாத காய், தீம்பழம் - இனிய பழம், கூழை – மந்தம்

**முன்னுரை**

சங்ககாலத்தில் வாழ்ந்த மக்கள் இயற்கையாகக் கிடைத்த உணவைத் தேடிச் சேகரித்தல் வேட்டையாடி உணவு பெறுதல் காடுகளை அழித்துத் தாமே உழுது பயிர் செய்தல், கால்நடை வளர்த்துப் பயன் பெறுதல், பயிர்த் தொழில் தொழில் செய்தல் ஆகியவற்றை மேற்கொண்டிருந்தனர். சங்ககால மக்களின் உணவு முறையையும் அவர்கள் விளைவித்த உணவுப் பொருள்களையும் குறுந்தொகை மூலமாகக் காண்பதே இவ் வியலின் நோக்கமாகும்

**அவரை**

மலைப் பக்கத்தில் உள்ள பெரிய திணைப்புனத்தில் குறவன்,சிறிய தினையை அறிந்தபின் அதன் மறுக்காலில் அவரைக் காய்களானது விளையும், இதனை

**……………………………சாரல்** (குறுந்.90)

**பெரும் புனக் குறவன் சிறுதிணை மறுகால்**

**கொழுங்கொடி அவரை பூக்கும்.**

என்ற வரிகளில் அறியலாம். இதன் மூலம் திணை மற்றும் அவரை போன்றவற்றை மக்கள் ஒரே தருணத்தில் பயிரிட்டு ஒன்றன் பின் ஒன்றாக அறுவடை செய்து விளைவித்தனர் என்பதை அறிய முடிகிறது மேலும் அவரைப் பூவிற்கு கிளியின் அலகு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. இதனை>

**பனிப்புதல் இவர்ந்த பைங்கொடி அவரைக்**

**கிளிவாய் ஒப்பின் ஒளிவிடு பல்மலர்**

என்ற பாடல் வரியின் மூலம் அறியலாம்.

**உழுந்து**

சிவந்த தாளையுடைய உளுந்துச் செடியில் இயல்பாய் முற்றியுள்ள காய்களை மானினம் கவர்ந்து உண்ணும் அத்தகைய உளுந்துச் செடியானது குறும்g+o;g; பறவையின் கால் போன்றது என்று உவமைப்படுத்தப்பட்டுள்ளது. இதனை

**பூழ்கால்அன்ன செங்கால் உழுந்தின்** (குறுந்.68)

**ஊழ்ப்படு முதுகாய் உழையினம் கவரும்**

என்ற பாடல் வரியின் மூலம் அறியலாம்

**இரும் பனிப்பருவத்த**

**மயிற்க்கால் உழுந்தின் அகல் இலை எள்**

மழையானது தக்க பருவத்தில் பெய்யாது பொத்தலால் எள் பயிர்கள் உள்ளீடு இல்லாத வெறும் காய்களைப் பெற்றன என்பதை,

**பழமலை பொழிந்தனப் பதன் அழpந்து உருகிய**

**சிதட்டுக்காய் எண்ணின் சீல் பெயர் கடை நாள்** (குறுந்.261)

என்ற வரிகளால் அறியலாம்.

**மிளகு**

மிளகும் அவர்களின் உணவு பொருளாக இருந்தது என்பதை மலைப்பக்கத்தில் படர்ந்துள்ள மிளகுக் கொடியில் உள்ள மிளகை ஆண் குரங்கானது குளிரின் துன்பம் நீங்கக் கடித்தது என்பதன் மூலம் அறியலாம் இதனை

**ஏற்றோ வாழி? தோழி முற்றுபு**

**கறிவலர் அடுக்கத்து இரவில் முழங்கிய**

**மங்குல் மாமழை வீழ்ந்தென,பொங்கு மயிர்க்** (குறுந்.90)

**கலை தொட இழுக்கிய பூநாறு பலவுக்கனி.**

**இப்பாடல் மூலம் அறியலாம்.**

அடுக்காக உள்ள மலைகளைஞடைய இடத்தில் படர்ந்துள்ள மிளகுக் கொடியின் தளிர்களை அருந்த குரங்குகள் அனைத்தும் ஒருங்கு கூடி இருந்தன. இதனை.

**கறிவளர் அடுக்கத்து ஆங்கண், முறி அருந்து**

**குரங்கு ஒருங்கு இருக்கும் பெருங்கல் நாடன்** (குறுந்.288)

**தினை**

மலையில் வாழ்ந்த குறவன் தன்னுடைய உணவுக்காகத் தினை விதைத்தான் என்பதை.

**பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகால் (குறுந்.82)**

என்ற பாடல் மூலம் அறியலாம். குறவன் தன்னுடைய தோட்டத்தில் விளைந்த தினைகதிரைத் தன் சுற்றதாருடன் சேர்ந்து உண்பதற்காக முதலில் அதைக் கடவுளுக்குப் படைத்தான்.

புனவன் துடவைப் பொன்போல் சிறுதினைக்

குடிஉண் கடவுட்கு இட்ட செழுங்குரல்.

தினை யின் கதிர்களைக் கிளிகள் ஒடித்து உண்டமையால் தினையின் தாள்கள் குறுமையடைந்தன.

**புனவன் துடவைப் பொன்போல் சிறுதினை**

**கிளி குறைத்து உண்ட கூழை இருவி (குறுந்.105)**

**தினைப் பயிர்களின் அடையே முளைத்த களைகளைப் பிடுங்கினர்.**

**நறவு(கள்)**

சங்க காலத்திலே மக்கள் கள் உண்டு உணர்விளந்த பின்னும; மீண்டும் அதனை விரும்பும் எண்ணம் உடையவர்களாக இருந்தனர்> இதனை.

**மகிழ்ந்தனன் தலையும் நறவு உண்டாங்கு**

**விளழந்தனன் தலையும் நீ வெய்துற்றனை (குறுந்.165)**

இப் பாடல் மூலம் அறியலாம். இதைத் தவிர பாடல் எண்கள் 193 298 போன்றவையும் கள் உண்ட செய்தியைக் கூறுகின்றன

**களித்தாற்குக் கள்ளற்றே**

**இன் கடுங்கள்ளின் அஃதை களிற்றொடு**

**நன்கலன் ஈயும் நாள் மகிழ் இருக்கை**

**நெய்**

சங்ககால மக்கள் தம்முடைய உணவான சோற்றுத்திரனள உடன் நரை எருமையின் வெண்ணெய் சேர்த்து உண்டனர் இதனை.

**ஆசுஇல் தெருவின் ஆசுகில் வியன் கடை**

**செந்நெல் அமனல வெண்மை வெளpழுது**

என்ற பாடல் மூலம் அறியலாம். மலைநாடன் ஒருவன் நெய்யில் ஊறி வெந்த காடை கறி குழம்பை உணவாகப் பெறுகிறான் என்பதை

**நெய்க்கனி குறும்பூழ் காயம் ஆக**

**ஆர் பகம் பெருக --- கோமி அக்கை**

பெருங்கடல் நாடன் வரைந்தன அவன் எதிர் பாடல் மூலம் அறியலாம்

**நெல்**

மக்கள் பச்சை நெல்லை இடித்துச் செய்யப்படும் பசிய அவலானதுஅவர்கள் உண்ணும் உணவாக இருந்தது இதனை

**பாசவல் இடித்த கருங்காழ் உலக்கை**

**ஆய் கதிர் நெல்லின் வரம்பு அனைத்தியற்றி**

இப்ப பாடல் மூலம் அறியலாம் **(குறுந்.238)**

செந்நெல்லை சங்ககால மக்கள் உணவாக உட்கொண்டனர் இதனை

**ஆசுகில் தெருவின் ஆசுயில் வியன் கடை**

**சேந்நெல் அமலை வெண்மை வெளிலழுது**

என்ற பாடல் வரியின் மூலம் அறியலாம்
அரும்பு முதிர்ந்த புங்கம் பூக்கள் உதிர்ந்த இடுமணல் மேடுகள் நிறைந்த இடங்கள் யாவும் அவர்கள் விளைவித்த செந்நெல்லின் வெள்ளிய பொரியைச் சிதறினாற் போன்ற தோற்றத்தை தருகின்றன.

**பயறு**

முறுக்கிய கொம்புகளையுடைய கலைமான்கள் பொழுது சாய்ந்த நேரத்தில் பயிற்றங்காயின் நெற்றுகளைக் களை கறித்து தின்றதை

**அரிமடப் பிணியோடு அல்கு நிழலில் அசை இ**

**வீததை வியல் அரில் துஞ்சி பொழுது செல**

**செழும்பயறு கறிக்கும் புன்கண் மாலை** **(குறுந்.338)**

இப்பாடல் வரியின் மூலம் அறிகிறோம்

**பலா**

மலைப்பகுதிகளில் கொம்புகள் இனிய கிளைகள் தொங்குகின்ற பலா மரங்களை உடைய அவற்றின் ஒவ்வொரு கிளையிலும் பலாப் பழங்கள் தொங்கி கொண்டு இருந்தன அவை உண்ணுவதற்கு இனிய தேன் போன்ற சுளைகளை உடையனவாக இருந்தன என்ற செய்தியை

**தம் இல் தமதுஉண்டன;ன சினைதொறும்**

**தீம் பழம் தூங்கும் பலவின்**

என்ற பாடல் வரியின் மூலம் அறியப்முடிகிறது

மலைப்பக்கத்தில் உள்ள பலா மரத்திலுள்ள பலாப்பழத்தைத் தோண்டித் திண்பதற்காக ஆண் குரங்கானது அதைக் கொட்டவுடன் அப்பமமானது அருவியில் விழுந்து அருவியானது அப்பழத்தை ஊரில் உள்ள அனைவருக்கும் உண்ணும் படி நீர் உண்ணும் துறையில் கொண்டு சேர்த்தது இதனை

**கலை தொட இழுக்கிய பூநாறு பலவுக்கனி**

**வரை இழி அருவி உண் துறைத் தருஉம்.**

என்ற பாடல் வரியின் வழிப் பெறலாம்.

**பால்**

இடைகுடியில் பிறந்த ஒருவன் தன்னுடைய செல்வமான ஆட்டினுடைய பாலை தான் உண்டு மீதமுள்ள பாலை ஊரில் உள்ளவர்களுக்குக் கொடுத்து பண்டமாற்று முறையில் உணவுப்பொருளை வாங்கித் தன் சுற்றதாருக்குத் தந்துள்ளான் இதனை

**பறியுடைக் கையர் மறியினத்து ஒழிய**

**பாலொடு வந்து கூழொடு பெயரும்**

மேற்கூறிய பாடல் மூலம் அறியலாம்.
எருமையானது தான் ஈன்ற கன்றினை விட்டு நீங்காமல் இருக்க அருகில் உள்ள வயலில் மேய்ந்து தன் பசியை போக்கிக் கொண்டது தன் கன்றானது பசியால் துடிக்காமல் இருக்க அதன் அறிவிலேயே இருந்து பாலை கொடுத்தது உடலை

**இருமருப்பு எருமை ஈன்றணிக்காரன்**

**ஊமவன் யாக்க குமவியின அகலாது**
**பா அல் பைம்பயிற் ஆரும் ஊரன்**

**வரகு**

புன்செய் நிலத்தில் விதைக்கப்பட்ட வரகு வளர்ந்து தழைத்து ஆண் மான்கள் அவற்றில் கதிர்கள் அரியப்பட்ட தாள்களில் தழைத்த இளைய கொழிந்துகளை உண்ணும் இதனால் மக்களும் விலங்குகளும் வரகு பயிரை உணவாக உண்டுவாழ்ந்தனர் என்பதை இப்பாடல் மூலம் அறியலாம்

**புழமழைக் கலித்த புதுப்புன வரகின்**

**நவ்வி நாள்மறி கல்விகடன் கழிக்கும் (குறுந்.220)**

**மா**

மாமரத்தின் பழத்தைப் பொய்கையிலுள்ள வாளை மீன்கள் கவ்வி உண்பதற்கு ஏதுவாக அம்மரங்கள் பொய்கையின் அருகில் வைக்கப்பட்டுள்ளன இதனால்;. மாம்பழங்கள் மக்களுக்கும் உணவாக இருந்துள்ளமையை அறிய முடிகிறது

**கழனி மா அத்து விளைந்துஉகு தீம்பழம்**

**பமன வாழை கதூஉம் ஊரன் (குறுந்.8)**

**முடிவுரை**

சங்ககால மக்கள் தங்களுடைய வாழ்க்கையை இயற்கை சூழலுக்கு ஏற்ப வாழ்ந்து வந்தனர் சங்ககால மக்கள் சுற்றுசூழலோடு அமைந்த கருப்பொருள்கள் ஒன்றான உணவுப் பொருள்களை பெற்று இயற்கையாக கிடைக்கும் உணவுப் பொருட்களை உண்டும் வாழ்ந்து வந்தனர் மக்கள் மிளகு கரும்பு நெல், வாழை பழங்கள் போன்ற செடி கொடிகளை பயிரிட்டு அவற்றை பண்டமாற்று முறையில் விற்று தங்களுடைய வாழ்க்கையை மேற்கொண்டு இருந்தனர் .

**சான்று விளக்கம்**

1.திருமலை புலவர் பொ.வே சோமசுந்தரனார் மலைபடுகடம் பா எ 110

2.முனைவர் ஜெயபால் அகநானூறு 104

3.பெருமலைப் புலவர் பொ.வே சோமசுந்தரனார் சிறுபாணாற்றுப்படை பா எ 140

4.முனைவர் செயப்பால் அகநானூறு பா எ 2

5. முனைவர் கு.வெ பாலசுப்பிரமணியன் நற்றிணை பா எ 39

**துணை நூற்பட்டியல்**

1.சுப்பிரமணியன் ச.வே -- குறுந்தொகை
மாணிக்கவாசகர் பதிப்பகம்
31சிங்கர் தெருஇ பாரிமுனை
சென்ன-600018 டிசம்பர் 2010

2. நடராசன்.வி - குறுந்தொகை(மூ.உ)
நியுசெஞ்சுரிபுக்ஹவுஸ்
பிரைவேட் லிமிட்
சென்னை-98

3.பாலசுப்ரமணியன்.கு.வே- குறுந்தொகை(மூ.உ)
நியு செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிட்
சென்னை-98

4.மேலது - மலை படுகடாம் முதற் பதிப்பு - 2007